# வடபழனி மெட்ரோ ரயில் நிலையத்தில் பல அடுக்கு வாகன நிறுத்தம் கட்ட முடிவு

சென்னை, மே 20: வடபழனி மெட்ரோ ரயில் நிலையத்தில் வாகன நிறுத்தத்துக்கு தேவை பல மடங்கு உயர்ந்துள்ளதால், பல அடுக்கு கார் நிறுத்துமிடம் கட்டுவதற்கு மெட்ரோ ரயில் நிறுவனம் திட்டமிட்டுள்ளது.




சென்னை மாநகரில் மெட்ரோ ரயில் நிலையங்களில் உள்ள வாகன நிறுத்தங்களுக்கு வாடிக்கையாளர்கள் மத்தியில் வரவேற்பு அதிகரித்து வருகிறது. பல்வேறு மெட்ரோ ரயில் நிலையங்களில் உள்ள நிறுத்தங்கள் தினசரி நிரம்பி வழிகின்றன. இதன் மூலமாக மாதத்துக்கு சுமார் ரூ.58 லட்சம் வரை வருவாய் ஈட்டப்படுகிறது. தினசரி மட்டும் ரூ.1.92 லட்சம் வருவாய் ஈட்டப்படுகிறது. இதில் வடபழனி மெட்ரோ ரயில் நிலையத்தில் உள்ள வாகன நிறுத்தம் வருவாய் ஈட்டுவதில் முதலிடத்தில் உள்ளது. இங்கு தினசரி சராசரி 1,821 வாகனங்கள் நிறுத்தப்படுவது மூலமாக, தினசரி ரூ.43,330 வருவாய் கிடைக்கிறது. தற்போது, இருசக்கர வாகனங்களை மட்டுமே நிறுத்த வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், வடபழனி மெட்ரோ ரயில் நிலையத்தில் பல அடுக்கு கார் நிறுத்துமிடம் கட்டுவதற்கு மெட்ரோ ரயில்

நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இது குறித்து மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரி கூறியது:

வடபழனி மெட்ரோ ரயில் நிலையத்தில் வாகன நிறுத்தம் இடத்தில் வசதியை அதிகப்படுத்துவதற்கு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வு முடிவில், 100 வாகனங்களை(கார்கள்) நிறுத்தும் அளவுக்கு மல்டி லெவல் பார்க்கிங் அமைப்பதற்குத் திட்டமிட்டுள்ளோம்.

இந்த நிலையத்துக்கு அருகில் வணிக வளாகம் அமைந்துள்ளது. அந்த வளாகத்துக்குச் செல்ல வருபவர்கள் இங்கு வாகனத்தை நிறுத்துகின்றனர். எனவே, பல அடுக்கு வாகனங்களை நிறுத்தும் வசதியை ஏற்படுத்துவதற்கு முடிவு செய்துள்ளோம். இந்த ரயில் நிலையத்தில் தற்போது வாகன நிறுத்துவதற்கு தேவை பல மடங்கு உயர்ந்துள்ளது. இங்கு கூடுதல் வசதியை ஏற்படுத்துவது மூலமாக அதிக பயணிகள் நன்மை அடைவர். புதிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது மூலமாக, கூடுதல் வருவாய் ஈட்ட முடியும் என்றார் அவர்.